1987 மே 11] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 16, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 17 மற்றும் 18 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களை கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1987) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(ஓ) விளம்பரப் பொருள்களின் கட்டாயத் தணிக்கைச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பொருள்களின் கட்டாயத் தணிக்கைச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 28/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 18 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

---

* 1987 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பொருள்களின் கட்டாயத் தணிக்கைச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 28/1987) நிறைவேற்றப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு, நிறைவேற்றப்பெற்றது.

(பிற்பகல் 12–30)

(ஔ) இந்திய முத்திரைத்தாள் மற்றும் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு இந்தியமுத்திரைத்தாள் மற்றும் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிற 1987 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள்கள் மற்றும் பதிவு செய்தல் சட்டமுன்வடிவு குறித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

இந்தச் சட்டமுன்வடிவில் சொத்து விற்பனையின்போது பதிவு செய்யப்பட்டிருக்கிற ஆவணங்களில் சொத்தினுடைய மதிப்பு அதாவது 'மார்க்கெட் வேல்யூவை' விடக் குறைவாக காண்பித்திருக்கிற முத்திரைத் தீர்வையில் இழப்பை திரும்பப் பெறுவதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவிலே, சில குறிப்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற காரண நோக்க விளக்கத்திலே. தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதிலே மார்க்கெட் வேல்யூ என்பது சாதாரணமாக ஆவணங்கள் பதிவு செய்யப் படுகின்றபோது, பதிவு செய்யப்படுகின்ற அந்த ஆவணத்தில் நிலத்தினுடைய மதிப்பு குறைவாக இருக்கின்ற நிலத்தை முதலில் பதிந்துவிட்டு, பின்னால், அதிகமான மதிப்பு வருகின்ற நிலத்தை 'கரெக்ஷன்' என்ற பெயராலே சேர்த்து, அதனால் அரசுக்கு இழப்பு ஏற்படுகின்ற சந்தர்ப்பங்கள் அரசினுடைய

* 1987 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.